# 1971இல் உருவான ஆனையிறவு முகாம் 1991இல் புலிகளின் கடும் தாக்குதலுக்குள்


பக்கங்கள் நான்கு — விலை ரூபா:- 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 227 பிரசோற்பத்தி ஆனி 29 ( 13 - 07 - 1991 ) சனி


தற்போது விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலுக்குள் சிக்கியுள்ள ஆனையிறவு இராணுவ முகாம் 1971 ஆம் ஆண்டில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆட்சிக் காலத்தில் பொலிஸ் நிலையமாக அப்பகுதியில் உருவானது. 1971 இலிருந்து 1977 வரை பொலிஸாரின் பலம் படிப்படியாகக் குறைந்து வந்து 1977 இல் ஜே. ஆர் ஆட்சிக்காலத்தில் ஆனையிறவு பொலிஸ் தடுப்பு நிலையம் இராணுவ முகாமாகியது. துருப்புக்கள் குவிக்கப்பட்டன 50 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்தப்பகுதியில் தகரக்கொட்டகைகளால் முகாம் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டது 1984 இல் ஆனையிறவு முகாமில் 50 படையினர் தங்கியிருந்தனர். 1986 இல் படையினரின் தொகை 86 ஆகியது இத்தொகை படிப்படியாக அதிகரித்தது 1990 இல் உமையாள்புரம், பெரிய உப்பளம், கடற்கரைப்பகுதி என்பனவற்றுக்கு விஸ்தரிக்கப்பட்டது. ஆனையிறவு முகாமில் உள்ள உல்லாசப் பயணிகள் விடுதி கொழும்பிலிருந்தும் வரும் இராணுவ — 4 ஆம் பக்கம் பார்க்க

# உப்பள ரயில்கடவையைத் தாண்டி முகாம்மீது புலிகள் தாக்குதல்

## வடமராட்சியில் ஹெலி ரோந்து

வடமராட்சி கிழக்குப் பகுதிகளிலுள்ள கடற்கரை ஓரப் பகுதிகளில் கடந்த சில தினங்களாக இரவு வேளைகளில் ஹெலிகெப்டர்கள் கடற்கரை பகுதிகளில் நோட்ட மிட்டுச் செல்வதாகத் தெரிவிக்கப் படுகிறது. 33, 43

## படையினருக்கு அருகில் புலிகள் இருப்பதால் விமானத் தாக்குதல் நடாத்த முடியாத நிலை

ஆனையிறவு முகாம் மீது மூன்றாம் நாளாக நேற்றும் புலிகள் கடும் தாக்குதலை நடாத்தினர். விடுதலைப் புலிகள் தற்போது உப்பள ரயில்வே கடவையைக் கடந்து சென்று பிரதான முகாம் மீது தாக்குதலைத் தொடுத்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் இராணுவ முகாமுக்கு அண்மையில் இருந்து தாக்குதல் நடாத்துவதால் விமானப் படையினர் புலிகளின் நிலைகள் மீது இராணுவத்தினரின் பாதுகாப்புக்கருதி தாக்குதல் நடாத்துவதை நேற்று நண்பகல்முதல் குறைத்துள்ளனர். எனினும் முகாமின் புறப் பகுதிகளில் விமானத் தாக்குதல் நடைபெறுகிறது.

இதேவேளை நேற்று நண்பகலுக்குப் பின்னர் முகாமிலிருந்து படையினரின் தாக்குதல் வேகமும் குறைந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## தென்மராட்சியில் ஹெலித் தாக்கு

நேற்று அதிகாலை எழுதுமட்டுவாள், இயக்கச்சி, பளை போன்ற இடங்களை நோக்கி ஆனையிறவுப் படையினர் கடும் ஷெல் தாக்குதல்களை நிகழ்த்தியுள்ளனர்.

அதே சமயம் முகமாலை, எழுதுமட்டுவாள், பளை

—04 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணமடைந்துள்ள வீரவேங்கைகள்

ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதலில் இதுவரை களப்பலியான வீர வேங்கைகளின் விவரம்:- லெப் சுதன் (செபமாலை யேசுதாஸ் மன்னார்), லோ (சின்னத்தம்பி அமிர்தலிகம் முல்லைத்தீவு), ரமேஸ் (தம்பித்துரை சிறுவிளான், சியர்லை (இராச இரட்ணம் யாழ்), பரன் (சிங்காரம் மாங்குளம்), மாணிக்கதாஸ் (இராசு வவுனியா), லொசலன் (சக்திவேல் வவுனியா), சரத்பாபு நவரத்தினம் கோபிநாத் கொக்குவில் காந்தன் (கணபதிபதம் பேதன் மட்டக்களப்பு), பிந்துரன் (அன்ரனி லோகு மன்னார்), குமார் (லக்ஸ்மன் மட்டக்களப்பு), தீபன் (சாமித்தம்பி அம்பாறை), திலாம் (கனகரத்தினம் சாவகச்சேரி), நியூட்டன் (குமாரசாமி

—04 ஆம் பக்கம் பார்க்க

## ஹெலிகள் மீது புலிகள் சரமாரியான தாக்கு

ஆனையிறவு பகுதியில் தொடர்ந்து அரசின் விமானப் படை ஹெலிகப்டர்கள் மீது புலிகள் தாக்குதல் நடாத்தி வருவதாக பி. பி. ஸி. குறிப்பிட்டது.

காயமடைந்த சிப்பாய்களை அகற்றுவதற்காக ஹெலிகள் முகாமினுள் இறங்க முயற்சிக்கும் போது புலிகள் சரமாரியான ஷெல் தாக்குதல் நடாத்துவதாக தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இதுவரை இரு ஹெலிகள் சேதமடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

□ □

## பி. பி. ஸிக்கு யோகி பேட்டி
## அரசின் புதிய சமரசத் திட்டத்தில் அதிகாரம் குறித்து எதுவும் இல்லை

''விடுதலைப் புலிகள் நிபந்தனையற்ற பேச்சுக்கு தயார் என்ற போதிலும் ஸ்ரீலங்கா அரசு நிபந்தனைகள் விதிக்கிறது. இது அரசு இராணுவ தீர்வையே நாடுகிறது என்பதைக் காட்டுகிறது.''

இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலர் யோகி பி. பி ஸிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

அண்மையில் அரசினால் உருவாக்கப்பட்ட சமரஸத் திட்டத்தில் அதிகாரம் சம்பந்தமான எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இதனால் அது குறித்து எதுவும் இப்போது கூறமுடியாது.

தமிழக நிலை குறித்து கருத்து வெளியிட்ட யோகி

—04 ஆம் பக்கம் பார்க்க

## அஞ்சலி

ஆனையிறவு முகாம் தாக்குதலால் வீரமரணமடைந்த சித்திக் (தவானந்தவேல் விக்கினேஸ்வரன் . வல்வெட்டித்துறை) காந்தன் (கணபதி

—04 ஆம் பக்கம் பார்க்க

## இரத்த வங்கியில் பலர் இரத்த தானம்

பொதுமக்கள் யாழ் போதனா வைத்தியசாலை இரத்தவங்கிக்குச் சென்று பெருமளவில் இரத்தம்வழங்கி வருகின்றனர். நேற்றுமட்டும் போதியளவு இரத்தம் வழங்கியதைக்காணக் கூடியதாக இருந்தது.

சிறுவர்கள் தொடக்கம் பெரியோர்கள் வரை ஆண் பெண் வேறுபாடின்றி முண்டியடித்துக்கொண்டு இரத்தம் வழங்கியதைக்காணக் கூடியதாயிருந்தது.

சேமித்து வைக்கமுடியாத நிலையிலும், ஜெனரேட்டர் வசதியின் மையாலும் பல

— 04 ஆம் பக்கம் பார்க்க

## முகாமில் தட்டுப்பாடு இல்லை என்கிறார் அதிகாரி

ஆனையிறவு முகாம் படையினருக்கு எந்த அத்தியாவசியப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு இல்லையாம்.

இத்தகவலை நேற்று கொழும்பில் வெளியிட்ட இராணுவ அதிகாரி ஆனையிறவு படையினருக்கு உணவு மற்றும் ஆயுதங்கள் போதியளவுஉள்ளதாகக்குறிப்பிட்டாராம்.

□ □

## கொழும்பு ராணுவத் தலைமையகம் முன் வெடிகுண்டுப் புரளி; மக்கள் பதற்றம்

கொழும்பில் இராணுவத் தலைமையகம் முன்பாகவுள்ள 14 மாடிக்கட்டிடத்தில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலினால் நேற்று கொழும்பு நகர் சிறிது நேரம் அல்லோலகல்லோலப் பட்டது.

இம்மாடிக் கட்டிடத்தினுள் குண்டுகள் வைக்கப்பட்டதாக மூன்று அநாமதேயத்தொலைபேசி அழைப்புகள் இராணுவத்துக்குக் கிடைத்தன. இதையறிந்து அக்கட்டிடத்தில் இருந்த சுமார் 1500 மக்கள் அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடினர்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## இடர் நிவாரணம் வழங்கப்பட்டது

யாழ் செயலக ஊழியர்களுக்கு 1988 ஆம் ஆண்டுக்

—04 ஆம் பக்கம் பார்க்க

# வவுனியாவில் தங்கும் பிறமாவட்டத்தவரும் பதிய வேண்டுமென அறிவிப்பு

வெளியிடங்களில் இருந்து வவுனியாவுக்குச் சென்று அங்கு தங்குவோர் அனைவரும் படை முகாம்களில் அல்லது பொலிஸ் நிலையங்களில் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் விடுதிகளில் தங்கியுள்ளோர் அனைவரும் இவ்வாறு பதிவு செய்து கொள்ளல் வேண்டுமெனவும், வவுனியாவில் தங்குவதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## யூகோஸ்லேவிய சண்டையால் வெளிநாட்டுப் பயணம் பாதிப்பு

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் வட பகுதியைச் சேர்ந்தவர்களின் வெளிநாட்டுப் பயணம் யூகோஸ்லேவிய நாட்டில் நடைபெற்று வரும் சண்டைக்கான பதற்ற நிலைமையினால் பாதிக்கப்பட்டுள்ளது.

பணம் வாங்கிய பிரயாண முகவர்களில் பலர் இந்தச் சண்டையைக் காரணம்காட்டி சாக்குப் போக்குச் சொல்லிப் பயண ஏற்பாடுகளைப் பின்போட்டு வருவதாகவும் சொல்லப்படுகின்றது. (13)

## நன்கொடை

வலி- வடக்குப் பிரதேச சபையின், தெல்லிப்பழை உப- அலுவலகத்தின் நிர்வாக எல்லைக்குள் இயங்கும் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் தமக்குரிய நன்கொடைப் பணத்தைத் தற்பொழுது மல்லாகத்தில் இயங்கும் தெல்லிப்பழை உப- அலுவலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-10)

## கலைப்பீடத்தினர் நிவாரணப் பணி

யாழ் பல்கலைக் கழக கலைப்பீடமாணவர் ஒன்றியத்தினர் அகதிகள் புனர்வாழ்வுக் கென திரட்டிய 13,250 ரூபாவை மடு அகதிகளின் நிவாரணத்துக் கென மாணவர் பேரவைத்தலைவரிடம் கையளித்னர். (ப-12)

## யாழ் கோட்ட பண்ணிசைப்போட்டி

யாழ்ப்பாணம் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான பண்ணிசைப் போட்டி இம்மாதம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொத்தணி மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் முதலிடம் பெற்றவரும், தேசிய, தனியார் பாடசாலைகளைச் சேர்ந்தோரும் இப் போட்டியிற் பங்கு கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர்.

# செய்தி உலகம்

## போரிட பாக். தயார்

தனது அணு நிலையங்களைத் தாக்க முனையும் எந்த நாட்டுடனும் போரிட பாகிஸ்தான் தயாராக உள்ளதாக பாக். பிரதமர் அறிவித்துள்ளார். எவரது அச்சுறுத்தலுக்கும் பயந்து தனது அணுஆயுதத் திட்டத்தை நிறுத்த முடியாது எனவும் அவர் அறிவித்துள்ளார்.

## நோர்மனுக்கு 50 லட்சம் டாலர்

வளைகுடா வெற்றிக் கமாண்டரான நோர்மன் ச்வார்ஸ் கொப் வருகிற ஆகஸ்ட் 31ஆம் திகதி ஓய்வுபெறவுள்ளார்.

இராணுவத்தில் அவர் 34 ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார். 56 வயதான ஜெனரல் நோர்மன் தனது வாழ்க்கைச் சரித்திரத்தை எழுத 50 லட்சம் டாலர்கள் (ரூ 20 கோடி) பெறுவார்

## கறுப்பு நீதிபதி ஓய்வு பெறுகிறார்

அமெரிக்காவின் அதிஉயர்ந்த சுப்ரீம் கோர்ட்டின் முதலாவது ஒரே கறுப்பு நீதிபதியான தேர்குடமாஷல் ஓய்வுபெறவுள்ளார்.

அமெரிக்காவின் சட்டம், அரசியலமைப்பு ஆகியவற்றில் சுப்ரீம் கோட்டே இறுதி முடிவைக் கொண்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஈராக்கில் பயங்கரத் தொற்றுநோய்

உணவு, மருந்து என்பவற்றை இறக்குமதி செய்ய அனுமதிக்குமாறு ஈராக் விடுத்த கோரிக்கையை ஐ. நா. சபை நிராகரித்துள்ளது.

இதனால் உணவு மருந்து இன்றி இந்த ஆண்டில் குறைந்தது ஒருலட்சத்து 20 ஆயிரம் குழந்தைகள் அங்கு இறக்கலாமென ஈராக் அறிவித்துள்ளது.

ஈராக் முழுவதும் ஊட்டச் சத்துக் குறைந்து பயங்கரத் தொற்றுநோய் பரவி வருவதாக அங்கு சேவையாற்றி வரும் சர்வதேச தொண்டர் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

## காவலூர் மக்கள் வங்கியின் கணக்குகளைப் புனரமைக்கும் வேலை

இராணுவ நடவடிக்கைகளால் பாதிப்புக்குள்ளான ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக் கிளை தற்போதுஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையின் கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

இவ்வங்கியில் கணக்கு வைத்திருந்த வாடிக்கையாளர்களின் கணக்குகளைப் புனரமைக்கும் வேலை தற்பொழுது தொடங்கப்பட்டுள்ளது.

இவ்வங்கியில் நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள், அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், தனியார்கள் தங்கள் கணக்குகளுக்குரிய சான்றுகளைச் சமர்ப்பித்துத் தங்கள் கணக்குகளைப் புனரமைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

நடைமுறைக் கணக்கு வைத்திருந்த வாடிக்கையாளர்கள் யாவரும் உடனடியாக மக்கள் வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளும்படி பிராந்திய முகாமையாளர் கேட்டுள்ளார்.

## முக்கிய கலந்துரையாடல்

யாழ் மாநகர சபைப் பிரதேசத்துக்குள்ளும், நல்லூர்ப் பிரதேச சபை எல்லைக்குள்ளும் உள்ள சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகசபை உறுப்பினர்களையும் இன்று பி. ப 2 30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் தவறாது ஒன்றுகூடும்படி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

## மணிவாசகர் குரு பூசை

வண்ணை சிவன்கோவிலில் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மணிவாசகர் குரு பூசையினையொட்டி விசேட அபிஷேகம், விசேட பூசை, திருவிழா, திருவாசகம் முற்றோதல் என்பன நடைபெற ஆலய பரிபாலன சபையினர் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


### விசேட ஆங்கிலம்

1. சிறுவர்களுக்கும், வெளிநாடு செல்பவர்களுக்கும் ஆங்கிலத்தில் மிகத் திறமையுடன் பேச, எழுத வாசிக்கத் தரமான திறமையைப் பெறுவதற்கு என்றும் விரைந்து நாடுங்கள்.
(INCLUDING SPOKEN ENGLISH)
2. திறமான, தரமான சகலவித ஆங்கில மொழி பெயர்ப்பிற்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்.
3. சகலவித விளம்பரங்களுக்கும் சிரமமின்றி எந்நேரமும் உதவிக்கு கலந்தாலோசிக்கவும்

ஓய்வுபெற்ற அதிபரும் ம, சங்கரகாந்திலிங்கம்
அரச மொழிபெயர்ப்பாளரும்
நெடியகாடு, வல்வெட்டித்துறை.
07063

### தவறிவிட்டது

பத்மாவதி பாலசுப்பிரமணியம் எனும் பெயரும் 365641617 V எனும் இலக்கமுள்ள தேசிய அடையாள அட்டையொன்று பிரயாணம் செய்யும்போது அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் பா. நவரேந்திரன் நெடியகாடு, வல்வெட்டித்துறை எனும் விலாசத்தில் அல்லது கல்வியங்காட்டிலுள்ள முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்: 07062

### சிறு விளம்பரம்

**ஜோதிடம்**

வெளிவந்துவிட்டது ஆகஸ்ட் 'வியாழ மாற்றம்'. எங்கும் விற்பனையாகின்றது. விலை 6/- ஜோதிடகணிப் புக்கள் Prof. சத்தியதாஸன் ஞானம்ஸ், சித்தன்கேணி. 07054

### ஒரு நிமிடம்!

உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றது
ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்

உங்கள் மனையில் இருந்தபடியே உணவுண்ணும் நிலை
காரணம் வருகை தந்தவர்கள் அறிவார்கள்
அமைதியான சூழல், நிறைவான உபசரிப்பு. சுத்தம், சுகாதாரம், இவற்றிற்கு முதலிடம், ஒரு காலைப்பொழுதையோ, பகற் பொழுதையோ, மாலை பொழுதையோ கழிக்க ஒரு முறை வருகை தந்து பாருங்களேன்!

ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா உணவகத்திற்கு
அறுசுவை அங்கே உங்களுக்காக காத்திருக்கும்

ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை
19/3, கொழும்புத்துறைச்சாலை
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

எடுத்துச் செல்லக்கூடிய உணவுப் பொட்டலங்கள்
விலை ரூபா 29 - 50 மட்டும்

விளம்பர அமைப்பு
செனித் விளம்பர முகவர்
07042

### தாதியர் பயிற்சி நெறி

TRAINING FOR NURSING

19--07--1991 இல் புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பமாகின்றன
(சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் தாதியருக்குரிய பாடத்திட்டப்பரீட்சைப் பெறுபேறுகள்)

1. சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
2. உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு ஏற்றது

தகைமை:- க. பொ. த. (சாதாரணம்)
காலம்:- 1 வருடம் { பாடத்திட்டம் 6 மாதம் / செய்முறைப் பயிற்சி 6 மாதம் }

பயிற்சி நெறிக்கான முழுக்கட்டணம் ரூபா 1500/-
(இலகு தவணை முறைகளில் செலுத்தலாம்)
(மாணவர் தொகையை மட்டுப்படுத்தியுள்ளதால் முன் கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்)
குறிப்பு:- மாவீரர் குடும்பத்தவருக்கு இலவசக்கல்வி

அதிபர்: வைத்திய கலாநிதி வி. பி. சுந்தரராஜன்
சாயி மருத்துவக் கல்லூரி.
இல. 6, பருத்தித்துறை வீதி, (1ஆம் ஒழுங்கை)
(மக் ரவல்ஸ் அருகில்)
யாழ்நகர்.
07039

## ★ நிபந்தனையற்ற பேச்சு ★ வெளிநாட்டு மத்தியஸ்தம்
# புலிகளின் கோரிக்கையை
## அகதிகளுக்கான அமெ. கமிட்டி வலியுறுத்துகிறது

இலங்கையில் நடைபெறும் இன மோதல்கள் குறித்துக் கவலை தெரிவித்துள்ள அகதிகளுக்கான அமெரிக்கக் கமிட்டி எந்த நிபந்தனையுமின்றி ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சு வார்த்தை நடாத்த வேண்டுமெனக் கோரியுள்ளது.

இந்தப் பேச்சுக்கு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று மத்தியஸ்தம் வகிக்க வேண்டுமெனவும் அக்கமிட்டி வலியுறுத்திக் கேட்டுள்ளது.

நிபந்தனையற்ற விதத்தில் ஐரோப்பிய நாடொன்றின் மத்தியஸ்தத்துடன் ஸ்ரீலங்கா அரசு பேச்சு நடாத்த முன்வர வேண்டுமென விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்திருந்த கோரிக்கையை அகதிகளுக்கான அமெரிக்கக் கமிட்டி ஏற்றுக் கொண்டுள்ளதையே இது காட்டுவதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### றொட்டரக் போட்டி முடிவு

யாழ்ப்பாணம் றொட்டரக் கழகத்தினரால் பேராசிரியர் ஹூதர் ஜெயசிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்படும் பொது அறிவுப் போட்டியின் ஒரு கட்டம் அண்மையில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

சுவாரசியமாக நடைபெற்ற இப்போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. (16)

### கோப்பாய் விரிவுரையாளருக்கு

''கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலைச் சகல விரிவுரையாளர்களும் கற்பித்தற் பயிற்சி மேற்பார்வை தொடர்பான எல்லா ஆவணங்களுடனும் தவணைப் பரீட்சை மதிப்பீட்டு விவர ஆவணங்களுடனும் 15ஆம் திகதி கலாசாலையில் பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறும் கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் கேட்டுள்ளார்.''

## சவுதி விமான விபத்தில்
# 261 பேர் பலி!

நைஜீரியாவிலிருந்து மக்காவுக்கு ஹஜ்யாத்திரை மேற்கொண்டு சென்றிருந்த ஹாஜிகளை மீண்டும் நைஜீரியாவுக்கு ஏற்றி வந்த கனேடிய விமானமொன்று தீப்பற்றிய நிலையில் சவுதி அரேபிய விமான நிலையத்தில் விழுந்து நொருங்கியதில் விமானத்தில் பயணம் செய்த மொத்தம் 261 பேரும் உயிரிழந்தனர்.

நான்கு என்ஜின்களைக் கொண்ட இந்த டி.சி. 8 விமானத்தின் ஒரு இயந்திரத்தில் திடீரெனத் தீப்பிடித்ததாகவும்அதனைத் தொடர்ந்து விமானத்தை மீண்டும் தரையிறக்க முற்பட்ட போதே அது விழுந்து நொருங்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இறந்த 261 பேரில் 14 பேர் விமான சிப்பந்திகளாவர்.

### கருத்தரங்கு ஒத்திவைப்பு

இன்று சனிக்கிழமை யாழ் பல்கலைக்கழகப் புவியியற்றுறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவிருந்த வட பிரதேசத்தின் நிர்வாக மையத்துக்கான இடஅமைவு தெரிவு' கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ் வைத்தியசாலை காவல் கடமை தனியார் பாதுகாப்புச் சேவையிடம்

யாழ் போதனா வைத்தியசாலையில் இதுவரை காலமும் நடைமுறையிலிருந்து வந்த ஆஸ்பத்திரி காவலாளிகளின் சேவை நிறுத்தப்படவுள்ளது.

வைத்தியசாலை பாதுகாப்புக் கடமைகள் தனியார் பாதுகாப்புச் சேவையினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

தற்போது கடமையாற்றும் ஏழு ஆஸ்பத்திரிக் காவலாளிகளும் அவர்களது சொந்த இடங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக்வும் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாதத்துடன் காவலாளிகள் முறை வைத்தியசாலையிலிருந்து நீக்கப்படுவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (79)

### பொன் விழா சொற்பொழிவு

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொன் விழாவில் நினைவுச் சொற்பொழிவு ஒன்றை தமிழ்த்துறை ஏற்பாடு செய்துள்ளது.

கோ. நடேசையர் நூற்றாண்டு இவ்வாண்டு என்ற படியால் நடேசையர் நினைவுப் பேருரை ஒன்றைத் தமிழ்த்துறை ஒழுங்குசெய்ய விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (48)

## வவுனியாவிலும் மருந்தில்லை!
### அவசர நோயாளர்கள் அனுராதபுரத்துக்கு

வவுனியா ஆதார வைத்தியசாலையில் ஒக்சிஜன் இல்லாததால் பல நோயாளிகளை அனுராதபுரம் வைத்தியசாலைக்குஅனுப்பும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாதக்கணக்காகத் தொடரும் இந்த நிலைகுறித்து அவசர கோரிக்கைகள் கொழும்பிற்கு அனுப்பியும் நிலைமை திருந்தவில்லை.

மிகவும் அவசியமான வலி முறிப்பு மருந்தும் இங்கு இல்லை.

வைத்தியசாலைக்கு 5000 பன்டேஜ் ரோலும் 400 பஞ்சு ரோல்களும் தேவைப்படுகின்ற போதிலும் 1050 பன்டேஜ்ரோல்களும் 175 பஞ்சு ரோல்களுமே விநியோகிக்கப்படுகின்றன.

## தென்பகுதி சேவைக்கென
# 317 புதிய ரயில் பெட்டிகள்!

ரூமேனியாவிலிருந்து 317 புதிய ரயில்பெட்டிகள் அடுத்த வருடம் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

அத்துடன் ரயில் பெட்டிகளைப் பழுது பார்க்கவென உள்ளூரில் ரூமேனியாவின் உதவியுடன் ஒரு தொழிற்கூடமும் அமைக்கப்படவுள்ளதாகப்புகையிரதப்பகுதி அறிவித்துள்ளது.

தற்பொழுது திருத்தப்பட்டு வரும் 25 ரயில் என்ஜின்கள் அடுத்த வருடம் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

## மட்டக்களப்பு டிப்போவின்
# 14 பஸ்கள் இராணுவ வசம்!

மட்டக்களப்பு டிப்போவில் உள்ள அரைவாசிக்கும் மேற்பட்ட பஸ்களை இராணுவத்தினர் தமது தேவைக்காக எடுத்துள்ளதாக மட்டு. தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு டிப்போவில் 25 பஸ் வண்டிகள் முன்னர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

அவற்றில் 4 பஸ்களை இராணுவத்தினர் ஏற்கனவே தமது பாவனைக்கு என எடுத்துக் கொண்டனர்.

இதன்பின்னர் சில தினங்களுக்கு முன் மேலும் 10 பஸ் வண்டிகளை இராணுவத்தினர் எடுத்துச் சென்றுள்ளனர்.

இதனால் மட்டக்களப்பில் பஸ் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

## செப்ரெம்பர் 17ஆம் திகதி மரம் நடும் தினம் அனுஷ்டிப்பு

செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி தேசிய மரம் நடும் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

ஒருமாதம்வரை இந்த மரம் நடும் மாதம் அனுஷ்டிக்கப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

### மகளிர் குழு

ஒட்டுசுட்டான் கச்சிலைமடுவில் மாவீரர்கள் பெயரில் மூன்று உழைக்கும் மகளிர் குழு உற்பத்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன

அன்னைபூபதி உழைக்கும் மகளிர் குழு, தினேஷ் உழைக்கும் மகளிர் குழு, திலீபன் உழைக்கும் மகளிர் குழு ஆகியவற்றில் எண்பத்தைந்து படித்த யுவதிகள் உற்பத்தி முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். (38)

## அநாவசியமாக வீதியில் செல்வதை
# நிறுத்துங்கள்! - காவல்துறை

இன்றைய யுத்தகால சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு யாழ் நகரின் கண்டிவீதி, ஆஸ்பத்திரி வீதிகளில் பொது மக்கள் தேவையில்லாமல் கூட்டம் கூட்டமாக செல்லல், துவிச்சக்கர வண்டிகளில் செல்லல் என்பவற்றை தவிர்த்துக் கொள்ளுமாறு தமிழீழ காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவினர் பொது மக்களைக் கேட்டுள்ளனர்.

இக்கால கட்டத்தின் அவசியத்தை மனதிற் கொண்டு நகரின் ஏனைய வீதிகளைக்கூட அவசியமற்று தேவையில்லாது, பாவிக்க வேண்டாம். வீதிகளில் வாகனங்கள் எந்த நேரமும் அதி வேகமாக வரலாம். இந்த நிலையில் நாம் வீதிகளில் அவசியமற்று நடமாடுவதன் மூலம் வீதித் தடைகளை ஏற்படுத்துவதற்கு உடந்தையாக உள்ளோம். இவ்வாறான சந்தர்ப்பங்களில்தான் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. வீதி விபத்து ஒன்று ஏற்படுமாயின் தனி ஒருவர் மட்டுமன்றிப்பலரின், உயிர்கள் பலியாவதற்கு நாம் உடந்தையாக உள்ளோம் என்பதை மனதில் கொள்வோம் எனவும் தமிழீழ காவல்துறையின் செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளது.

இன்றைய காலகட்டத்தின் அவசியததை உணர்ந்து நகரின் பிரதான வீதிகளில் வீதிப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் தமிழீழ காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவினர், மற்றும் தொண்டர் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு உங்கள் ஒத்துழைப்பைத் தந்துதவுமாறும் தமிழீழ காவல்துறையினர் பொதுமக்களைக்கேட்டுள்ளனர்.

## இரத்தினக்கல் தொழிலுக்கு தனியான வர்த்தக வங்கி

இரத்தினக்கல் வர்த்தகத்திற்கென மாத்திரம் தனி ஒரு வர்த்தக வங்கி நிறுவப்படவுள்ளது.

இரண்டுகோடி ரூபா மூலதனத்துடன் இந்த வர்த்தக வங்கி அமைக்கப்படவுள்ளது.

இலங்கையில் தனியொரு தொழிலுக்கென ஒரு வர்த்தக வங்கி அமைக்கப்படுவது இதுவே முதற் தடவையாகும்.

### பல் வைத்திய விரிவுரை

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க வைத்தியத்துறைப் பகுதியின் ஆதரவில், யூலை 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் பல்வைத்திய முக்கியத்துவம் பற்றி வைத்திய கலாநிதி, கே. சிறிஸ்கந்தராசா யாழ் பல்கலைக்கழக பௌதீக விரிவுரை மண்டபத்தில் விரிவுரை நடத்த நடத்தவுள்ளார்.

வைத்திய கலாநிதி சிறிஸ்கந்தராசா பல்லு வைத்தியத்தில் நிபுணத்துவம் பெற்று இம்மாவட்டங்களில் பல் சத்திர சிகிச்சை நிபுணராக கடமையாற்றி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## மக்கள் வங்கிக் கிளையை சென்னையில் திறக்க முயற்சி

இலங்கை மக்கள் வங்கிக் கிளை ஒன்றை சென்னையில் திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு யாத்திரை செல்வோர் மற்றும் தமிழகத்தில் தங்கியிருக்கும் இலங்கையர்கள் ஆகியோரின் நலன் கருதியே மக்கள் வங்கிக்கிளையை சென்னையில் திறக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்

### கருத்தரங்கு

இலங்கை தமிழ் நாடகம் பற்றிய பிரச்சினைகள் என்ற கருத்தரங்கு இலங்கை மன்றக் கல்லூரியில் இரண்டு நாள்கள் நடைபெற்றது.

### காவல்துறை அறிவிப்பு

சிறிலங்காப் பொலிஸில் சேவையாற்றி ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரையும் 14 ஆம் திகதி காலை 9 மணிக்குத் தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்குத் தவறாது சமுகம் தரும்படி காவல்துறையின் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## வெளிநாடுகளில் வேலை செய்தோர்
# கார்கள் இறக்குமதி செய்ய அனுமதி!

உழைக்கும் வெளிநாட்டுச் செலாவணித் திட்டத்தின் கீழ் வெளிநாடுகளில் வேலை பார்த்து வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதித்தவர்கள் கார்களை இறக்குமதி செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இப்புதிய திட்டத்தின் கீழ் வெளிநாடுகளில் மூன்று மாத காலம் வேலை பார்த்துவிட்டு நாடு திரும்பியுள்ளோரும் வெளிநாடுகளில் இருந்து கார்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### பெரிய விளானில் மௌனத் துறவு

சிவ தொண்டர் நிலைய அனுசரணையுடன், வடசேரிப் பெரிய விளான் விநாயகமூர்த்தி ஆலயத்தில் மௌனத் துறவு 14 ஆம் திகதி ஞாயிறு காலை 7 மணிக்கு துறவி சுவாமியம்மா தலைமையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் மாவட்டத்தில் இருந்து மக்கள் வெளியேறி வருகின்றனர்

மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து அங்குவாழும் பொதுமக்களில் பெருந்தொகையானோர் வெளியேறி மடு அகதி முகாமிற்கும், பிறமாவட்டங்களுக்கும் சென்றுள்ளதாக மன்னார் செய்திகள் தெரிவிக்கின்றன.

மன்னார் மாவட்டத்தில் ஒன்பது பெரிய இராணுவ முகாம்கள் தற்போது அமைக்கப்பட்டுள்ளன. மன்னார்த் தீவிற்குள் ஐந்து பெரிய முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது வெவ்வேறு இடங்களில் மினிமுகாம்கள் அமைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படையினருக்கு உதவியாக அறுநூறுக்கும் மேற்பட்ட முஸ்லிம் ஊர்காவல்படையினரும், ரெலோ இயக்கத்தினரும் செயற்பட்டு வருகின்றனர்.

இம் மாவட்டத்தின் 80வீதமான பகுதி மனித சஞ்சாரமற்ற 'சூனியப்பிரதேசமாக காட்சியளிக்கிறது மேலும் மக்கள் அங்கிருந்து வெளியேறுவதாக மன்னார் செய்திகள் தெரிவிக்கின்றன. 79

## போக்குவரத்து அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது

இன்று முதல் மறு அறிவித்தல் வரை சகல அவசர அனுமதி வழங்கும் காரியாலயங்களிலும் அவசர அனுமதி வழங்கப்படமாட்டாது என தமிழீழ போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

வலிகாமம் பிரிவில் சங்கானை, உரும்பிராய் காரியாலயங்களில் இதுவரை அனுமதிக்காகவிண்ணப்பித்து இதுவரைஅனுமதிகிடைக்காதோர் முறையே இன்று 13 ஆம் திகதியும் நாளை 14 ஆம் திகதியும் தத்தமது அவசர அனுமதி காரியாலயங்களுக்கு சமுகம் தரும்படிகேட்கப்பட்டுள்ளது.

## வடமராட்சி கிழக்கில் தேவாலயங்களில் மக்கள்

வடமராட்சி கிழக்குப்பகுதியில் பல கிராமங்களில் உள்ள மக்கள் வெளியேறி கோவில்களிலும் தேவாலயங்களிலும் பாடசாலைகளிலும் தங்கியுள்ளனர்.

தாழையடி, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், போக்கறுப்பு ஆகிய கிராமங்களில் உள்ள மக்களில் பெரும்பாலானோர் வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

நாகர்கோவில், குடத்தனை செம்பியன்பற்று ஆகிய இடங்களில் இவர்கள் அடைக்கலம் புகுந்துள்ளதாக கூறப்படுகின்றது.

கடற்படைத் தாக்குதல்களுக்கு அஞ்சியே பெரும்பாலானோர்வெளியேறியதாக தெரிவிக்கின்றனர். 33, 43, 50

## கிளிநொச்சியிலும் நேற்று விமானத் தாக்குதல்

கிளிநொச்சியில் நேற்று நண்பகல் இரு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நிகழ்த்தின.

கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் பகுதியில் இரு குண்டுகளும், திருநகர் பகுதியில் இரு குண்டுகளும் வீசப்பட்டன.

கந்தசுவாமி கோயிலுக்கு பின் புறம் விழுந்த குண்டினால் 18, 25, வயதுள்ள இரு இளைஞர்கள் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு கிளிநொச்சி நீதிமன்றவளவிற்கு அவ்ரோ விமானம் பீப்பாய்க் குண்டை வீசியது. இவ்விடத்தில் நின்றவர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர்

நேற்று முன்தினம் நண்பகல் ஆனையிறவிலிருந்து கிளிநொச்சி வைத்தியசாலை நோக்கி ஏவப்பட்ட ஷெல் குண்டு அருகிலுள்ள ஹோட்டல் மீது வீழ்ந்ததில் ஹோட்டல் சேதமடைத்தது சேத விபரங்கள் தெரியவரவில்லை. (79)

## விமானத்தாக்குதல்களால் பல வீடுகள் சேதம்

ஆனையிறவு இராணுவ முகாமை அண்டியுள்ள பகுதிகளில் விமானங்கள் நடாத்தி வரும் தாக்குதல்களால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் உள்ள சங்கத்தார் வயல், கோவில் வயல் ஆகிய இடங்களில் உள்ள வீடுகளே சேதமாகியுள்ளன.

இப்பகுதி மக்கள் ஏற்கனவே வெளியிடங்களுக்குச் சென்றதால் உயிரிழப்புக்கள் இடம்பெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. 50

## படையினர் சரணடைய புலிகள் அவகாசம்?

ஆனையிறவு முகாம் படையினரைச்சரணடையுமாறுவிடுதலைப்புலிகள் கோரியுள்ளதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கென விடுதலைப்புலிகள் நேற்று மாலைவரை காலக்கெடுவிதித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதை ஊர்ஜிதப்படுத்தியுள்ள பாதுகாப்பு அமைச்சு நேற்று நண்பகலின் பின்னர் முகாம் மீது விடுதலைப்புலிகளின் தாக்குதல் குறைந்திருந்ததாக நேற்றிரவு தெரிவித்தது. (79)

## செனி. ஜோன்ஸ் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நல்லூர் படை அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட சகல பிரிவுகளினதும் செனி. ஜோன் அம்புலன்ஸ் முதலுதவித் தொண்டர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் தொண்டர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி பிரதேச அத்தியட்சகர் கேட்டுக்கொள்ளுகின்றார்.

## யாழ் குடாநாடு எங்கும் மாவீரர்களுக்கு அஞ்சலி

ஆனையிறவு இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியின் போது களத்தில் வீரமரணமடைந்த 27 போராளிகளுக்கும் யாழ் குடா எங்கும் பொதுமக்களால் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

சாவகச்சேரி சங்கத்தானை இந்துக்கல்லூரியில் வீரமரணமடைந்த போராளிகளின் புகழுடம்புகள் மக்களின் அஞ்சலிக்காக புலிக்கொடிபோர்த்தப்பட்டு வைக்கப்பட்டிருந்தன.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள் திரண்டு வந்து வீரவேங்கைகளுக்கு தமது இறுதி வணக்கத்தினைத் தெரிவித்தனர். (79,74]

## ராஜீவ் கொலை விசாரணை புதிய நீதிமன்றத்தில்

ராஜீவ் காந்தியின் கொலை வழக்கை விசாரிக்க தனியான நீதிமன்றம் ஒன்று சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதுவரை கொலை தொடர்பான சந்தேக நபர்களை செங்கல்பட்டு நீதிமன்றமே விசாரணை செய்து வந்தது. பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் இப்புதிய நீதிமன்றம் அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### ஆனையிறவில்...

நாவற்குழி), மாயவன், சித்திக் செந்தில் வீரமரணமடைந்த பெண்புலிகள் வருமாறு: நிசானா (தங்கராசா நகேஸ்வரி), சகாரா மகேஸ்வரி மட்டக்களப்பு , ஜமுனா (தியாகராசா மட்டக்களப்பு), கோமதி (முத்துவேல் வாளைச்சேனை), லோகா (சக்திவேல் கிளிநொச்சி), பகிரா (சின்னத்தம்பி ஏழாலை), ரூபியா (டயனி அலோசியஸ் மன்னார்), அமராவதி (நடாபாலசிங்கம் கன்னையதீவு), தபோசா, வாகினி, ஆகிய வீரவேங்கைகள்இதுவரை வீரமரண மடைந்துள்ளனர். (74, 79)

### அரசின்...

எம். ஜி. ஆர் அரசு முன்னர் அளித்த ஆதரவை அவரது கட்சியைச் சேர்ந்த தற்போதைய முதலமைச்சர் ஜெயலலிதாவும் நல்குவார் எனஎதிர்பார்க்கிறோம் எனக் குறிப்பிட்டார்,

### உப்பள —

நேற்று இரவு முகாம் மீது மீண்டும் புலிகள் கடும் தாக்குதலை ஆரம்பித்துள்ளதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (79)

### இடர்நிவாரணம்—

குரிய இடர் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டு தொடக்கம் 18 மாதங்களுக்கு இடர் நிவாரணம் வழங்க அரசு அனுமதித்ததையடுத்து குறிப்பிட்ட 18 மாதங்களுக்கும் கடமைக்கு வருகை தந்த ஊழியர்களுக்கு அவர்களது வருகையின் அடிப்படையில் ஒரு மாதச் சம்பளத்தின் அரைப்பங்கு இடர் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. (47

### தென்மராட்சியில்...

ஆகிய இடங்களை நோக்கி ஹெலிகப்டர்பலாலியிலிருந்து போகும் போதும், வரும் போதும் கலிபர்த்தாக்குதல்களை நிகழ்த்திவருகின்றனர்.

முகமாலைப் பகுதியில் வந்த தேங்காய் லொறியை நோக்கி அதிகாலை கலிபர் தாக்குதலை நிகழ்த்தினர். சாரதியும், ஏனையோரும் இறங்கி தப்பி ஓடியதனால் மயிரிழையில் உயிர் தப்பினர். (79)

### 1971 இல்...

பொலிஸ உயரதிகாரிகள் தங்குவதற்காகவே அமைக்கப்பட்டது.

முப்பது காவலரண்களை இப்போது கொண்டுள்ள இம்முகாமுக்கு நீர் பற்றாக்குறையே பெரும் நெருக்கடியைக் கொடுத்து வந்தது புலிகளுடன் கடந்த ஆண்டு ஜூனில் போர் ஆரம்பித்த பின் இன்றுவரை முகாமுக்கு ஹெலிகள் மூலமாகவே நீர் கொண்டுவரப்பட்டது.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகள் மாநாட்டில் ஆனையிறவு படையினரின் நெருக்கடி குறித்து முகாம் அதிகாரி விளக்கியிருந்தார் படையினரின் உளவியல் தாக்கம் குறித்து கூறப்பட்டதாம்

ஆனையிறவு இராணுவ தடுப்பு முகாமை யாழ்வாசிகள் லஞ்ச முகாம் என்றே முன்னர் அழைத்து வந்தனர் இம்முகாம் குடாநாட்டிலிருந்து பணப்பயிர்கள், செல்வதையும் இந்திய வம்சாவளியினர் சட்ட விரோதமாக வந்து தெற்கே போவதைத் தடுக்கவும், குடாநாட்டுக்குக் காட்டு மரங்கள் வருவதை கட்டுப்படுத்தவும் அமைக்கப்பட்டது, ப-14

### கொழும்பு...

சிறிது நேரத்தில் கட்டிடம் வெறிச்சோடியது.

சிறிது நேரத்தில் அக்கட்டடத்தினுள் வெடிகுண்டுகளைத் தேடிய படையினர் குண்டு ஏதும் இருக்கவில்லை எனவும், வெறும் குண்டுப் புரளியே எனவும் பின்னர் அறிவித்தனர்.

### இரதத்...

பேரிடமிருந்து இரத்தத்தினைப்பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. (48)(79, 74)

### வடமராட்சியில்...

பத்மநாதன் - ஏறாவூர், மட்டக்களப்பு, ஆகிய இரு போராளிகளின் பூதவுடல்களுக்கு வடமராட்சிப் பகுதியில் ஏராளமான மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

இவர்களின் புகழுடம்புகள் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அலுவலகம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய வற்றில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாவீரர் மயானத்தில் அடக்கம்செய்யப்பட்டன.

A/L 92

தாவரவியல்

திரு. பொ. ஐங்கரநேசன்

புதிய பிரிவுகள்

(சனி, ஞாயிறு, வகுப்புக்கள்)

ஆரம்பம்:- 14 . 07 . 91 (ஞாயிறு)

காலை 6 - 7:- தாவர உடற்றொழிலியல்

காலை 7 - 8:- தாவர இராச்சியத்தின் பிரிவினைகள்

(புதிய உடலமைப்பும் இனப்பெருக்கமும்)

பிற்பகல் 2 - 3:- தாவர உடலமைப்பியல்

யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

07031

### யாழ்ப்பாணக்கல்லூரி

### பரிசளிப்பு விழா

இன்று (13 - 07 - 1991) நடைபெறவிருந்த பரிசளிப்பு விழா பிற்போடப்பட்டுள்ளது. நிகழவிருக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

அதிபர்

07064

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷேர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு ஸ்ரீ ஜெனி இ லேன் பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 13.07.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றதுபல.